பதிவு தாளாகம் பதிவு பெற்றது.

வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவது.

இந்துசாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 10.

ஆரம்பம்: விரோதிகு (1889) ஆவணி மீ 28உ, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 356

புத்-அ0] யாழ்ப்பாணம்- கீலகஷு சித்திரைமீ உகஉ வெள்ளிக்கிழமை (3-5-1968) [இலஃச

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் ஆதரவில் கீலகஷுண்டு சித்திரைத் திங்கள் 5-ம் நாள் (17-4-68) நிகழ்ந்த சைவமாநாட்டில் சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரவர்கள் (தேவகோட்டை) நிகழ்த்திய

தலைமையுரை

(முன் வளாச்சி — 3)

சிவபெருமானது திருவாக்குகளாகிய வேத சிவாகமங்களைப், பிரமாணங்களாகக் கொள்ளாத உலகாயதமும். நால்வகைப் பௌத்தங்களாகிய மாத்தியமிகம், யோகாசாரம். சௌத்திராந்திகம், வைபாடிகமும். ஆருகதமுமாகிய ஆறும் புறப்புறச் சமயங்களாம். சிவாகமங்களை விட்டு. வேதத்தை மட்டும் பிரமாணமாகக் கொண்டாலும், வேதப்பொருளுடன் முரணிப் பொருள் கொள்ளுதலும், வேதத்திற் சில பகுதியை மட்டுமே பிரமாணமாகக் கொண்டு மற்றவற்றை இகழ்தலும், வேதப் புறமான நூல்களையும் பிரமாணமாகக் கொள்ளுதலும் ஆதிய குற்றங்களையுடைய தருக்கம். மீமாஞ்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரமாகிய ஆறும் புறச் சமயங்களாம்.

வேத சிவாகமங்களைப் பொதுவகையிற் பிரமாணமாகக் கொண்டாலும் அவற்றிற்குப் புறமாகிய பாசுபதம் முதலிய நூல்களைச் சிறப்புவகையிற் பிரமாணமாகக் கொள்ளுதலும், வேதாகமங்களில் விலக்கப்பட்டவற்றைக் கைக்கொள்ளுதலும் ஆணவ மலத்துண்மை கொள்ளாமையும், அதனுண்மை கூறும் சிவாகம முடிபுகளை இகழ்வதுமாகிய குறைகளையுடைய பாசுபதம், மாவிரதம், காபாலம். வாமம், வைரவம், ஐக்கியவாதம் ஆகிய ஆறும் அகப்புறச் சமயங்களாம். பொருளுண்மை யெல்லாம் சித்தாந்த சைவரோடொப்பக் கொண்டாலும் அவற்றிற்குக் கூறும் பொதுவியல்பு, சிறப்பியல்புகளில் முரணுதலையுடைய பாடாணவாத சைவம், பேதவாதசைவம், சிவசமவாதசைவம், சங்கிராந்தவாத சைவம், ஈசுவர அவிகாரவாதசைவம், நிமித்த காரண பரிணாமவாத சைவமாகிய ஆறும் அகச் சமயங்களாம்.

இங்ஙனம் வகுக்கப்பெற்ற சமயங்களுள், அகச் சமயங்களாறும் சைவமே யாமாயினும், வேதாகமப் பொருளுண்மை கொள்ளுவதில் வேறுபாடுடையனவா யிருத்தலின், அவை சித்தாந்த சைவத்திற் கீழானவையாய்த் தாழ்ந்துள்ளன. இதனைக் குறிக்கவே சைவக்கூற்றின் முடிபாகிய சித்தாந்த சைவத்தைச் "சைவத்திறம்" என்று சிவஞான சித்தியார் அறிவித்தது.

"சைவத்தின் மேற் சமயம் வேறில்லை" என்றும், "சைவ சமயமே சமயம்" என்றும், ஆன்றோரனைவராலும் போற்றிப் புகழப் பெறுகின்ற நமது சமய உண்மைகளை, முறைப்படி அறிந்து ஒழுகுவது இன்றியமையாததாகும். அறிவு படைத்து வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும், அவன் வாழுகின்ற இல்வுலகத்தைப் பற்றியும். உலகத்துக்கும் அவனுக்கும் ஏற்பட்டுள்ள உறவைப் பற்றியும், அவ்வுறவு வந்ததற்குரிய காரணத்தைப் பற்றியும் உசாவியறிந்து கொள்ளும் விருப்பம் எழுவது இயல்பேயாகும்.

முப்பொருளுண்மை

உலகத்தில் தொடர்புகொண்டு வாழும் உயிர்கள், அத்தொடர்பை உண்டாக்கிய இறைவன், அத்தொடர்புக்குக் காரணமான மலம் ஆகிய மூன்றும் சைவசமயத்தில் "முப்பொருள்" என்றும் "திரிபதார்த்தம்" என்றும் ஒன்று கூட்டிப் பேசப்பெறும், இவற்றை ஆராய்ந்து முடிவுகாணும் பொறுப்பு நமக்கு உண்டு.

"கான்றவர் ஆய்ந்திடத் தக்க வாம்பொருள்
மூன்றுள மறையெலாம் மொழிய நின்றன
ஆன்றதோர் தொல்பதி ஆருயிர்த் தொகை
வான்றிகழ் தன்யென வகுப்பர் அன்னவே"

என்பது கந்தபுராணம். பதி, பசு, பாசம் ஆகிய மூன்றும் அநாதி நித்தியப் பொருள்கள். பதியும், பசுக்களும் அறிவுடைமையால் ஒரு இனமாகவும், பாசம் அறிவின்மையால் மற்றொரினமாகவும் இருக்கும். இவை, ஒரு காலத்தில் ஒருவரால் உண்டாக்கப்பட்டன வல்ல வாதலின், எக்காலத்திலும் எவராலும் அழிக்கப் பெறுவன வாகா. பசுக்கள், தமது இனமாகிய பதியைச் சேர்ந்து வாழும் உரிமையுடையன, அவ்வுரிமைக்குத் தடையாக, அநாதியாகவே அவற்றுடன் கூடி இடையூறு செய்து வருவது, பாசம். பேரொளிப் பிழம்பான பதியினிடத்து, இருட்பொருளான பாசம் சென்று சேர மாட்டாது. பசுக்களைப் பதி அணுகினால், பாசம் அவைகளை விட்டு நீங்கியிருக்கும். இதனை

"பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாசம் அநாதி
பதியினைச் சென்றணு காபசு பாசம்
பதியணு கிற்பசு பாசம் நிலாவே."

என்ற திருமந்திரம் அறிவித்தருளுகின்றது.

(தொடர்ச்சி 3 ஆம் பக்கம்)

சிவமயம
திருச்சிற்றம்பலம்

திருநிலைய புனலிடை மடிதர
வெரிபுகவெரியதுமிகு
பெருவளியினி லவிதரவளிகெட
வியனிடை முழுவதுகெட
இருவர்க ளுடல்போறையோடு
திரு யெழிலுருவடையவ
னினமலர்
மருவியவறுபதமிசைமுரன்
மறைவனமமர்தரு பரமனே.
திருச்சிற்றம்பலம்

— திருஞானசம்பந்த சுவாமிகள்.

நாவலர் நல்வாக்கு

பாவத்துக்கு அஞ்சிப் பொருள் சம்பாதித்து, பெரியோர்களுக்கும் வறியவர்களுக்கும் பங்கிட்டு, நீயும் உண்ணு.

சபை விசேஷ நிகழ்ச்சிகள்:

சைவபரிபாலனசபை நாவலர் மண்டபம்

9-5-68 வியாழக்கிழமை முற்பகல் 10-00 மணி சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்கள் சிவதீக்ஷை செய்து வைப்பார்கள்

அன்று இரவு 7-00 மணி 'உமாபதி சிவம்' என்னும் பொருளைப்பற்றி சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் ஒரு சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்

10-5-68 வெள்ளிக்கிழமை முற்பகல் 9-0 மணி சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்கள் ஞானிகளுடைய மணவாளர்களுக்கு முதல்வர்களுக்கு சிவதீக்ஷை செய்து வைப்பார்கள்.

இத்தீக்ஷைகளைப் பெற விரும்புகின்ற ஒவ்வொருவரும் 7-5-68 க்கு முன்னதாக தங்கள் பெயர்களையும் விலாசத்தையும் நமக்குத் தெரிவித்து வேண்டிய ஆயத்தங்களைச் செய்யுமாறு கோருகிறோம்.

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்,
சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம், 1-5-68

நன்றி

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் நடத்தப் பெற்ற அகில இலங்கைச் சைவமகாநாட்டைச் சிறப்பாக நடாத்தப் பொருளுதவி, உடல், ஆசி, நல்கியவர்களுக்கும், சமுகந் தந்து மகாநாட்டைச் சிறப்பித்தவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வை. இரகுநாதமுதலியார்
கௌரவ உதவிச் செயலாளர்,
சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம், 1-5-68.

ஒரு வேண்டுகோள்

முருகப் பெருமானுடைய பாக்கிரமத்தினைக் கூறும் நூல்களுள் திருச்செந்தூர்ப் புராணமும் ஒன்றாகும். ஈழநாட்டிலுள்ள ஆலயங்களிலும் மடாலயங்களிலும் கந்தசட்டி விரதநாட்களில் அந்நூல் புராண படனஞ் செய்யப்படும். அங்ஙனம் படிப்பவர்களுக்கு உதவுவெண்ணம் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் நீர்வேலி ஸ்ரீமத் ச. சங்கரபண்டிதர் அவர்களைக் கொண்டு அந்நூலுக்கு ஒரு உரை எழுதப்பட்டு 1097-ம் ஆண்டு அச்சிடப்பட்டது இப்போழுது அவ்வுரை நூல் கிடைப்பதரிது ஆகவே சைவமக்களுக்குப் பயனளிக்கும் வண்ணம் அவ்வுரை நூலை யாழ்ப்பாணம சைவபரிபாலன சபையார் அச்சிடத் தீர்மானித்துள்ளனர். குறித்த இத் திருத்தொண்டுக்கு உதவுவதற்கு சைவாபிமானிகள் தங்களாலியன்ற பணவுதவி புரிவார்களாக.

விபரங்கட்கு: அதிபர், இந்துசாதனம், வண்ணை. யாழ்ப்பாணம்.

அருட் செல்வம் (6)

— "அருட்கவி சி. வி." —

பவுணைப் பசப்படுத்திய பின்புதான் அணிய முடிகிறது. பஞ்சைப் படாத பாடுபடுத்திப் புடைவையாக்குகிறோம். ஏன்? உணவும் சோறுகூட எவ்வளவோ குத்துயாகிய பின்புதான், உணவுத்தக்க அனமாகிறது. கஷ்டங்களின் முடி மவல்லாம் உயர்ந்த கதியாகத்தான் முடியும் "உற்ற நோய் நோன்றல்" தவத்தின் சிறந்த அம்சம் என்கிறார் திருவள்ளுவர். ஆணவமலமாம் படிகிற கஷ்டத்தைக் கண்டு கொண்டிருக்கிற கருணைக்கடலாகிய எம்பெருமான், முடிவில் நீங்காத — குறைவிலாத — பொருத்தமான — திருத்தமான பெருமபயனையே தருகிறார். தருவதற்கே இவ்வையகத்தில் தொழுவார்க்கெங்கே இருக்கிறார் — என்கிறார். அப்பர் சுவாமிகள்.

படாதபாடுபடுத்தினார்கள் சமணர்கள். முடிவில் கல்லோடு சேர்த்துக் கட்டிக் கடலில் போட்டனர் — அந்த நேரத்தலே "நமசிவாய" நமசிவாயவே என்றார — எவ்வளவு உறுதிப்பாடும் துணிவும் அப்பருக்கு ஏற்பட்டது. அது ஆண்டவன் மீதுள்ள அத்தியந்த பக்தியினால் வந்தது.

கடுக்கடல், பனை போன்ற அலை, கண்ணெதிரே எவ்வாறுமிலலை நிலப்பரப்பாகக் காணவில்லை — சிறிய கல்லைப் போட்டாலே திடீரென அது சமுத்திரத்தின் அடிமற்ற போய்விடும் - பெரிய கருங்கல்லுடன் கட்டிப் போட்டால் எப்படியாகும் அவங்கு கொலுபடி எங்கும் பிரகாசமாய் நிறைந்த பரமனுக்கு கல்லைக் கப்பலாக்குவது பெரிய வேலையா? நமசிவாய மந்திரப்பலன், கல்லைக் கப்பலாக்கியது மன்றி, அந்தக் கப்பலை மெல்ல மெல்ல, கரைக்கு, ஆண்டவனின் சந்நிதான முள்ள கடற்கரைக்கு கொண்டுவந்து சேர்த்தது — அப்பருமேன், எனக்கு நல்லபாடம் படிப்பிக்கிறார். — நான் நினைக்கிறேன், நான் கடல அலைக்கடக்கத் தோணி இல்லை, நிலமாக தந்து முடிவுகளைத்துவந்தவன் ஆதிதல பெறுவதற்காக, — சிவபிரகாசனும், செழுநீர்ப்புனற கங்கையைச் சடையிலே வைத்துக் கொண்டான — அதாவது எல்லாக்கடல நீரு என் தலையில் அடக்கம், — எனவே, என அடியவர் கடலுக்குப் பயப்பட வேண்டியதில்லையே என்று கருத்துள்ள வடிவைக் காட்டி விளக்குகின்றாரோ? உனகருணையை என்னென்பேன். அனபோடு உன் நாமத்தைச் சொலலித தொழுகிற அடியவர் — அருமையாய் இருக்கும் உன்னைத் தேடியலையாமல் அவர்களுக்கிரங்கி, அருள் செய்வதற்காக இங்கே

தொடர்ச்சி 2-ம் பக்கம்

இந்துசாதனம்

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

கிலகஸ்ரீ சித்திரைமீ உகஉ வெள்ளிக்கிழமை [1968]

பேராதனைப் பல்கலைக் கழகத் திருமுருகன்

பேராதனைப் பல்கலைக் கழகத்திற் கல்வி பயிலும் இந்து மாணவர்களைத் தவிர்ந்த ஏனைய மாணவர்களுடைய மதமெதுவோ அம்மதத்தை அநுட்டிக்கும் மாணவர்களுடைய வழிபாட்டிற்குத் தேவையான கோவில்கள் எப்பவோ நிறுவப்பட்டுவிட்டன. இந்து மதத்தை அநுட்டிக்கும் மாணவர்களுக்கு ஒரு ஆலயத்தை நிறுவுவதற்குரிய பிரயத்தனங்கள் இந்து சமய அபிமானிகளால் நெடுங்காலமாக எடுக்கப்பட்டன. ஆனால் அவர்களுடைய முயற்சி இதுவரை பயனளிக்கவில்லை. மனிதன் தொடங்கும் எக்கருமமும் பூர்த்தியாகும் வேளையில்தான் சித்திக்கும். இப்பொழுது ஷை பல்கலைக்கழகத்தில் கல்விபயிலும் இந்து மாணவர்களதும் அப்பல்கலைக்கழகத்தில் கல்வி கற்பிக்கும் பேராசிரியர் சிலருடையதும் ஊக்கத்தினாலும் பக்திமினாலும்நன்முயற்சியினாலும் பல்கலைக்கழகத்தில் ஒருசைவாலயம்தோன்றும்காலம கைகூடிவிட்டது அவர்கள் சைவாபிமானிகளிடமும் பிற பரோபகாரிகளிடமும் நிதி திரட்டி ஒரு முருகன் ஆலயத்தை நிறுவுவதற்குத் தேவையான பணிகளைப்புரிந்தனர் வேதாகமமுறைப்படி ஆலயத் திருப்பணி நடைபெற்று வருகிறது திருப்பணி பூர்த்தியானவுடன் கோவிலில் பிரதிஷ்டைசெய்வதற்குத்தேவையான மூலமூர்ததியும்பரிவாரமூர்த்திகளும் செய்யப் பெற்றுவிட்டன. 29-4-68 ல் அம்மூர்த்திகள் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிற் சந்நிதானத்தில் வைத்துப் பூசிகைப்பட்டபின் பேராதனைப்பல்கலைககழக இந்துசமய மாணவர்களும் இந்துசமயப் பேராசிரியர்களும் அவற்றை அலங்கரிக்கப்பட்ட மோட்டார்வாகனத்தில் காங்கேசன்துறைவீதி மார்க்கமாக வேத பாராயணம் தமிழ்மறையோதல், மங்கள வாத்தியம் முதலியவற்றுடனும் கொடி குடை ஆலவட்டம் முதலிய விருதுகளுடனும் ஊர்வலமாக நல்லூர் சிவன் கோயிலுக்கு எடுத்துச் சென்றனர். மீண்டும் மோட்டார் பவனியில் அங்கிருந்து பேராதனைக்கு எடுத்துச் செல்வர். குறித்த திருவுருவங்கள் பேராதனையை அடைந்தபின் 6-5-68 ல் அன்று அவை ஆலயத்தில் பிரதிஷ்டை செயயப்பட்டு குமபாபிஷேக வைபவமும் முறைப்படி நடைபெறும்.

மாணவர்களுடைய கல்வி சமய அறிவையும் கடவுள் வழிபாட்டையும் அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

கற்றதனா லாயபயனென் கொல் வாலறிவன்
நற்றா டொழாஅ ரெனின்

மெய்யறிவினையுடைய கடவுளுடைய நன்மை பொருந்திய திருவடிகளை ஒருவன் வணங்கத் தவறுவானானால் அவனுடைய கல்வியினால் ஒரு பயனுமில்லை இக்காலம் பல்கலைக் கழகங்களில கல்வி பயிலும் மாணவர்கள் பலருடைய கலவியினால் அவர்கள் அடைய வேண்டிய பலனை அடையத் தவறுகின்றமைக்குக் காரணம் அவர்கள் சமயக் கல்வியைப் பெற்றுக்கொள்ளாமையே, இனிமேல் இந்து மாணவர்கள் கடவுள் வழிபாடு புரிவதற்கு ஆகுகு ஒரு சைவாலயம் தாபிக்கப்படுவதை யறிந்து யாவரும் பெரு மகிழ்ச்சி யடைன்றனர். அவ்வாலயத்தில் தாபிக்கப்பெறும் முருகன் தமிழ்மக்களுடைய குலதெய்வம. முருகப்பெருமானுக்கும் சிவபெருமானுக்கும் பேதமில்லை. சிவனே முருகன். முருகனே சிவன். சிவபெருமான் ஐந்து முகத்துடனும் அதோமுகத்துடனும்தோன்றி ஆறு திருமுகங்களிலுமுள்ள நெற்றிக் கண்களிலுமிருந்து ஆறு தீப்பொறிகளைச் செலுத்தினர் அவ்வாறு தீப்பொறிகளும் சரவணப் பொய்கையைச் சேர்ந்த பின் ஆறு குழந்தைகளாயின. உமாதேவியார் எடுத்துச் சேர்க்க ஆறு குழந்தைகளும் ஒன்றாய் விட்டன. முருகப் பெருமான ஒரு உடலும் ஆறு திருமுகங்களையும் கொண்ட ஒருகுழந்தையாகத் தோன்றினார்

"அருவமும் உருவம் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்ப தோர் மேனி ஆகக

வ
சிவமயம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை
79 - ஆவது வருடாந்தக் கூட்டம்

மேற்படி சபையின் 79 - ஆவது வருடாந்தக் கூட்டம் கிலக ஸ்ரீ சித்திரை மீ உகஉ (11-5-68) சனிக்கிழமை முற் பகல் 10-00 மணிக்கு சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

1. தேவாரம்.
2. சென்ற வருடாந்தக் கூட்ட வரலாறு.
3. சபையினது வருடாந்த அறிக்கை
4. சைவ பரிபாலன சபையினதும் சைவப்பிரகாச யந்திரசாலையினதும் பரிசோதிக்கப்பட்ட 1966—67 ஆண்டு வரவு செலவுக் கணக்குகள்.
5. A பிரிவு நிருவாகசபை அங்கத்தவர்களைத் தெரிவுசெய்தல்
6. புதுவருட உத்தியோகத்தர்களைத் தெரிவுசெய்தல்.
7. பிரேரணைகள்
8. வேறு விஷயங்கள்
9. தேவாரம்.

சைவபரிபாலனசபை, ஆ. தனபாலசிங்கம்
யாழ்ப்பாணம். 27-4-68. கௌரவ காரியதரிசி

முக்கிய கவனிப்பு :

1. வருடாந்தக் கூட்டத்தில் சமர்ப்பிக்கவேண்டிய பிரேரணைகள் 10-5-68 க்கு முன் செயலாளருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.
2. சந்தாப் பணத்தைப் பாக்கியின்றிச் செலுத்தியவர்களே வாக்குரிமை யுடையவர்கள்.
3. கணக்குச் சம்பந்தமான விஞக்கள் 10-5-68 க்கு முன் கௌரவ தனாதிகாரிகளுக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அருட்செல்வம்

(திருப்பாதிரிப் புலியூரிலே) அமர்ந்திருக்கிறாய் பெருமானே — என்கிறார் அப்பர்

.....''இவ்வையகத்தே
தோழுவார்க் கிரங்கி இருந்தருள் செய்பா திரிப்புலியூர்
சேழுநீர்ப் புனற்கங்கை சேஞ்சடைமேல் வைத்த
தீவண்ணனே''

"மனிதன் என்றால் நினைப்பவன் என்பது பொருள் ஏனையபிராணிகள் உணவு, உறையுள், இனவிருத்தியாகிய தேவையுடன் நின்று விடுகின்றன. மனிதனே தன்னைப்பற்றி — ஆன்மாவைப் பற்றி நினைக்கின்றவன். ஆகவே. ஆன்மாவுக்குரிய வினை நோயைத் தீர்க்கிற வைத்திய நிபுணன் நீயே (கடவுளே) தான் —உன்னினைவு கணமும் மறவாத நெஞ்சைத்தா —உன்னைக் கணமும் மறவாத நெஞ்சுடைய ஆன்மாதான் மோட்சம் — விடுதலை — பேரின்பம் அடைந்த ஆன்மா ஆகிறது — மேற் கொண்டும் பிறவாத ஆன்மா வாகிறது" இதனைத் தான் வேண்டுகிறார் அப்பர் இனி எனக்குப் பிறவிகள் வேண்டாம் என்று கேட்டால் இறைவனுடைய கணக்கைத் தான உணர்ந்தவனாக = அலலது தனககாக விட்டுக் கொடுக்கும் படி கேட்டதாக அமையுமோ தெரியேன் .. பிறவி வேண்டாம் என்றால் ஆன—வன் என்ன நினைப்பாரோ அவ்வளவு புனிதனாய் விட்டேனோ என்று தன்னிலையையே சிறுமையாக எண்ணுகிறார் மகான் அப்பர்; —பிறவி வேண்டா மென்பதை இன்னொரு முறையாய்க் கேட்கிறார்—

"புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என் மனத்தே
வழுவாதிருக்க வரந்தர வேண்டும்"

என்பது அப்பர் வேண்டுகோள் — சென்மங்களுள் சிறியது — புழு — அதாவது ஐயறிவிற்கு மேலே ஆறும் அறிவான (பகுத்தறிவு) படைத்தவன் மனிதன், — ஆனால் என்னை ஓரறிவுயிராக நீபடைத்தாலும உன் அடிகளை நான் மறவாமல் — நெஞ்சை விட்டு நீங்காமல் இருக்க வேண்டும் -- அதுவே பிறவியின் பயன். வினையால் கஷ்டமுற்ற ஆன்மா அடையும் சிவகதி — அந்தக் கதியைப் பெறும் வேண்டு கோளே கீழ்வரும் பாடலின் சாரமாகிறது.

"புழுவாய்ப் பிறக்கினும புண்ணியா உன்னடி என் மனத்தே
வழுவாதிருக்க வரந்தர வேண்டுமிவ் வையகத்தே
தோழுவார்க் கிரங்கி இருந்தருற் செய்பா திரிபுலியூர்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை மேல்வைத்த தீவண்ணனே.
—அப்பர்

கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலகம் உய்ய".

அசுரர்களைக் களையவும் தேவர்களைக் காக்கவும் முருகபெருமான திருவவதாரம செய்தார். பேராதனைப் பல்கலைக் கழகச் சைவாலயத்தில் தாபிக்கப் பெறும் முருகப் பெருமான் அடியார்களைப் பாதுகாப்பார். முருகப்பெருமானை அக்கோயிலில் தாபித்தலினால் மாணவர்கள் பெரும் நன்மையைப் பெறுவார்கள். கடவுள் பக்தி நல்லொழுக்கம் பொறை அன்பு அறம் முதலிய நற்குணங்களைப் பெறுவார்கள் அவர்கள் பிற காலத்தில் நமது தமழனனையினது தலைபபுதலவர்களாகத் திகழ்வார்கள். ——

சைவப் புலவர் இளஞ்சைவப்புலவர் தேர்வுகள், 1968.

விண்ணப்ப முடிபு திகதி: சித்திரைமுப்பது (12-5-1968) ஞாயிற்றுக்கிழமை.

பாலஸ்தாபனம்

ஈழத்துச்சிதம்பரம் தேவஸ்தான சுந்தரேசுவரர், சௌந்தராம்பிகை ஆலயங்கள் புனருத்தாரணம் (கருங்கற் திருப்பணி) செய்யப்பட விருப்பதால் எதிர்வரும் 10-5-68.ல் ஷை கோவிலில் மூர்த்திகள் பாலஸ்தாபனம் செய்யப்பெறும். 8-5-68 ல் இருந்து பூர்வாங்கக் கிரியைகள் மேற் கொள்ளப்பெறும்.

சமயச்சொற்பொழிவு

புன்னாலைக் கட்டுவன் ஆயக் கடவைச் சித்தி விநாயகர் ஆலய மண்டபத்தல் ஷை ஆலயக் கூட்டுப் பிரார்த்தனைச் சபையின் ஆதரவில் கிலக ஸ்ரீ சித்திரை மீ 21-ம் உ (3-5-68) வெள்ளிக்கிழமை மாலை 7 மணியளவில் "சைவசமய விதிமுறைகள்" என்னும் பொருள் பற்றி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் சிவஸ்ரீ. தத்புருஷ தேசிகர் திருத சிவலிங்கம் (சமாதானநீதவான்) பிரம்மஸ்ரீ.கு. பாலசுந்தரக் குருக்கள் B.A. சிவஸ்ரீ கை. நிருஞானசம்பந்தக் குருக்கள் பண்டிதர் சைவதிரு மு. வைத்தியலிங்கம் ஆகிய பேரறிஞர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

கோட்டு வறபனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டில்

வழ. இல: M B 8171
தெல்லிப்பளை மேற்கு
சுமசிவாயம் சொக்கலிங்கம்
— வழக்காளி.

எதிராக
தெல்லிப்பளை கிழக்கு
1. சின்னத்தம்பிபொன்னையாவும் பெண்
2. பொன்னம்மாவும் -எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டில M. B 8171-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1968 - ம் ஆண்டு வைகாசிமாதம் 29-ம் திகதி புதன் கிழமை (29-5-68) முற் பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள்கின்ற பிரசித்தஸ்தலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 2169-ம் 16-5-66 தொடக்கம் 28-4-67 வரைக்கும் ரூபா 1250 க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 220-70.ம் (ஏற்பட்டசெலவு ரூபா 130-20 வெலியாத்துச் செலவு ரூபா 47-50 ஏற்படக்கூடிய செலவு ரூ 43/—) இதில் ரூபா 950 இறுபட்டுள்ளது.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பழைக் கோவிற்பற்று தெல்லிப்பளை கிழக்கிறை அளுக்கிலிருட்டி பர நில இலா 3 குளி 13 இதில் கிழக்குப்பக்கமாக கிர்தமான பர நில இலா 1 குளி 4 கல்விரும் வடமேற்கேயிருக்கும் கிணற்றில் பங்கும் வடக்கெல்லை காணியின் அருகாக வழிவாய்க்காலும் எல்லை கிழக்கு நாகலிங்கம் பெண் சிவக்கொழுந்துவின் ஆதனம். வடக்கு அமபலவி கிருஷ்ணரின் ஆதனம். மேற்கு சின்னத்தம்பி பெண் மாரிமுத்துவினதனம். தெற்கு ரோட்டு. இதில் வடக்கு கிழக்கு எல்லைக் காணிகளுக்குரிய வழி வாய்க்கால் பிற நிங்களாக மிகுதியடங்கலும். பதிவு A 320/71,

அ. வெற்றிவேலு
கொமிஷனருக்கல்லமதிப்பாளரும்
இல. 18, 5 ... குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். எம் 28. 3-5-

பல்கலைக்கழகத்து முருகனுக்கு வரவேற்பு வைபவங்கள்

—ப—

மாவை. கந்தசுவாமி கோவிலிருந்து பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு மோட்டார் இரதமூலம் எடுத்துச் செல்லப்பட்ட முருகனுக்கு ஆங்காங்கேகல்லூரிகளாலும் பொது மன்றங்களாலும் சைவ அன்பர்களாலும் சிறந்த வரவேற்புகள் அளிக்கப்பெற்றன.

யாழ். சைவசமய அபிவிருத்திக் கழகத்தினர் யாழ் நகரமாகட்டு ஸ்ரீ இராச இராசேசுவரி யம்பாள் ஆலய முன்றலில் கூறுந்த வரவேற்பளித்தனர். நல்லூர் ஆசிரியகலாசாலை ஆசிரிய மாணவர்களும் சைவசமயஅபிவிருத்திக் கழகத்தினரும் திருமுறைப்பசனையைச் சிறப்புறச் செய்துசென்றமை குறிப்பிடத்தக்க ஒன்றாகவிருந்தது. நல்லூர் சாதனு பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் ஆகியோரும் வரவேற்பிலும் வழிபாட்டிலும் கலந்து கொண்டனர்.

(நாயன்மார்கட்டு நிருபர்)

கோட்டு விற்பனவு விளம்பரம்

வினுசித்தம்பி நவரத்தினம் அராலி வட்டுக்கோட்டை

வழக்காளி

வழக்கு இல. M. B. 7940

எதிராக

சுந்தரம்பிள்ளை சிவராசா ஈச்சமோட்டை யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 7940-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக்காணியை, 1968-ம் ஆடி ஜூன (June ஆனி) மீ 6உ வியாழக்கிழமை முற்பகல் 10½ மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபாய் 4748-ம் 16-1-1966 தொடக்கம் 22-11-1966 வரைக்கும் ரூபாய் 3500-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 376/76 சதமும்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுண்டிக்குளிக் கோவில் பற்று சிங்கியாதெரு இறை "சுடலையடியிற் புலம்" கடன் சுடலையடியிலவளவு'சுடலையடியிற்புலம்" என்னும் வேறு துண்டுக் காணிகளும் 'சுடலையடியிற் புலம் எனபதும் மற்றத் துண்டுக்காணியான சுடலையடியிலவளவு சுடலையடியிற்புலம் என்பதும் வரகுச் செய்கை நிலப்பரப்பு முப்பது (30 L M S VC)ம் செப்பயிர் வரம்பயிர்களும் மேற் கெல்லையிலுள்ள கிணறுமுப் பங்கும் D 262/264 ன் கீழ் பதிவப்பட்டது. இது முழுவதிலும் தென்மேற்கில் பிரிக்கப்பட்டு அநுமதி பெற்ற நில அளவைக்காரர் A லாசறஸ் (A. Lazaruz) என்பவரால் 8-7-1960-ல் கீறப்பட்ட 2745-ம் இலக்கப் படத்தில் காண்பிக்கப்பட்ட நிலப்பரப்பு எழும் மூன்று குளிகளும் (7 L M S V C & 3 K L S) என்னை மூக்கு ஈடுவைத்தவருக்குரிய இந்தக் காணியின் மிச்சம் வடக்கு பொன்னையா நவரத்தினம் பெண் மீனாம்பிகையின் ஆதனம் மேற்கு எழிப்பாதை தெற்கு K. குணரத்தினமும் K. தியாகராசாவும் V. நவரத்தினமும் K. ஆறுமுகநாதியினதும் ஆதனங்கள் வழிப்பாதையின் பாவிப்புரிமையும் யாழ்ப்பாணம் D 294/94 ன் கீழ் பதிவப்பட்டது.

க. சரவணமுத்து
கொமிசனர் & விலை மதிப்பாளர்
173, குறுசோ வீதி
யாழ்ப்பாணம் 6-4-1968
M 31 3-5-68

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கு மொகமெட் சுல்தான் அப்துல்காதர் முதது மொகமெட்டின் மகன் நஸிமா (Minor) சார்பாக அவரின் கெருங்கிய நண்பர் Next Friend) யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கு ராவ்ஸ் வீதி 73 ம் இலக்க இல்லத்தில் வசிக்கும் மொகமெட் அப்துல்லா காதர் மொகிதீன்

—வழக்காளிகள்

வழ. இல. P 948 எதிராக

1. அக்பர் றஸீன் (Minor) கல்லூரி வீதி College Road) வண்ணார்பண்ணை மேற்கு யாழ்ப்பாணம்

2 நயினா மொகமெட் அக்பார், கல்லூரி வீதி (College Road) வண்ணார்பண்ணை மேற்கு யாழ்ப்பாணம்

முதலாம் எதிரி (Minor) மைனராயிருப்பதால் இரண்டாம் எதிரியான தகப்பனாரின் பராமரிப்பாளராக (Guardian ad Litem)

—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் பட்டிசன் வழக்கு இலக்கம் P.948 ல் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி இதன் கீழ் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1968-ம் ஆடி மீ 8-ம் உ (8-6-68) முற்பகல் 10-0 மணி தொடக்கம் அக்காணிக்குள் நின்று மூந்த மூந்த அக்காணியின் பங்காளருக்கு கிடையிலும் அப்பங்காளர் வாங்கத் தவறின் பின்னர் என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். ஆதனத்தின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா முப்பத்தீராயிரம் (Rs. 32000)

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை தென்மேற்கிறை "பிச்சிக்குளம் கரை" உறுதிப்படி நிலப்பரப்பு ஒன்றும் குளி 14-ம் ஆனால் மேலே குறிக்கப்பட்ட வழக்கு இல P 948-ல் உத்தரவுபெற்ற உலாந்தா K. K. அப்புரோஸ் அவர்களால் அளக்கப்பட்டு தயாரிக்கப்பட்டதும் 19-1-66 என தேதியிடப்பட்டதுமான 411-ம் இலக்க பிளானின் படி நிலபரப்பு ஒன்றும் குளி 11 19ம் கொண்ட காணியும் அதனுள்ளடங்கிய கல்வீடும் கிணறு ஸ்டோர், மலகூடம் செய்பயிர்களும் இதற்கெல்லை வடக்கு A K. மொகமெட் சுல்தானினதனம், கிழக்கு மொகமெட் மொகிதீனின் ஆதனம் மேற்கு ஒழுங்கை தெற்கு அப்துல் றகுமானின் மனைவி சுகுறபிபியினதனம் இதடங்கலும்.

செ. விசாகரத்தினம்
133, பருத்தித்துறை றோட்டு, கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
நல்லூர், யாழ்ப்பாணம், 27-4-68. M 35 29-4)

ஏல விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் பெறுமதிவாய்ந்த மானிப்பாய் வீதிக்குச் சமீபத்தில் உள்ள நிலமும் வீடும்-

இலங்கைத் தேசிய வீடமைப்பு உதவி ஆணையாளர் திரு. உ. எஸ் விரசிங்க, கொழும்பு அவர்களிடமிருந்து எனக்குக் கிடைத்த கட்டளைப்படி கீழே விபரிக்கப்படும் இரு ஆதனங்கள் ஷெஸ்தாபனத்திற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 14,692/34ம் ரூபா 12,228/— க்கு 25-3-1957 விருந்து விற்பனை நாள்வரையும் 3½ விகிதவட்டியும் அல்லது முழுப் பணத்தையும் அதனுடன் தொடர்புடைய மற்ற செலவுகளையும் அறவிடுதற்காக என்னால் 1968-ம் ஆடி வைகாசி மீ 18 ம் திகதி சனிக்கிழமை முற் பகல் பத்து மணி (10. மு. ப) தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணியின் விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப் பிரிவு வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கிறை "ஆலடி" பர. வி இல 1 குளி பதினேழுடன் மூன்றில் இரண்டு (பர. வி. இல 2 குளி 17, 2/3 வீடும் அதைச்சேர்ந்தவளவும் இதடங்கலும் இதன் வரி மதிப் பீட்டிலக்கம் 357/1, யாழ்ப்பாணம், புன்னாலை வீதி.

2, ஷெ வண்ணார்பண்ணை தென்மேற் கிறை "ஆலடி" பதின் மூன்று (13) குளி மேலே சொல்லப்பட்ட 1ம் காணக்குப் போகக் வரவு செய்யும் உரிமை மறுவிபரங்கள் யாவும் ஏலவிற்பனையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

"மூர்த்தி வாசம்"
காரைநகர், 1968-ம் ஆடி வை. ஏரம்பமூர்த்தி
24-4 68. கொமிஷனரும் ஏலவிற்பனையாளரும்.
M 22, 3—5—)

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழக்கு. இல M B. 7907

வழுத்தலைவிளான 1 செல்லப்பா கிருஷ்ணரும் மனைவி
2. சதநிரவதியும் —வழக்காளிகள்

எதிராக

இணுவில், இணுவில் கிழக்கு 1. பொன்னு ஆறுமுகமும் மனைவி
2. தங்கமயாவும் —எதிராளிகள்.

M B 7907-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த உத்தரவிபடி கீழ்க்காணும் ஆதனங்கள் 1968-ம் ஆடி ஜூன (ஆனி) மீ 25 உ (25-6-68) செவ்வாய்க்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத் தொகை:— முதல்வட்டி ரூபா 7883-33 சதமும் மேலும் 6000-ம் ரூபாவுக்கு 24-12-65 தொடக்கம் 25-5-67 வரைக்கும் வருடமொன்றுக்கு 10 % வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரைக்கும் வருடமொன்றுக்கு 5 % வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 351-45 சதமும்,

ஆதன விபரம்:

1, வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவில் கோயிற்பற்று இணுவில் இறை 'கொக்கன்' நிலப்பரப்பு 14, கிழக்கெல்லையிலிருக்கும் கிணற்றின் பங்கும் இதற்கு எல்லை கிழக்கு தம்பாப்பிள்ளை செல்லையாவுக்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனம் வடக்கு சின்னத்தம்பி கந்தையாவுக்கும் காத்திலேசு நாகமாவுக்குமுரிய ஆதனங்கள். மேற்கு ஆறுமுகம் செல்லருக்கும் சங்கரப்பிள்ளை மனைவி வயிரவிப்பிள்ளையின் உரிமைக்காரர்களுக்குமுரிய ஆதனங்கள். தெற்கு சங்கரப்பிள்ளை மனைவி வைரவப்பிள்ளையின் உரிமைக்காரர்களுக்கும் வேதவனம் கதிர்காமருக்குமுரிய ஆதனங்கள், இது முழுவதிலும் சொரியலாய் நிலப்பரப்பு 5 குளிகள் 15 அதைச் சேர்ந்தவைகளும்,

2. ஷெ இணுவில் இறை 'நெல்லாக்கம் பனோடை' குளிகள் 6½ இதற்கு எல்லை கிழக்கு செல்லையா இராசதுரையினதனம். வடக்கு பொன்னு ஆறுமுகத்துக்கும் மனைவி தங்கம்மாவுக்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனம். மேற்கு அம்பலவாணர் ஆறுப்பிள்ளையினதனம். தெற்கு ஒழுங்கை. இது முழுவதும் உள்ளே வெளியே போகும் ஒழுங்கையாக பாவிக்க உரிமையிருக்கிறது.

வி செ. குட்டிப்பிள்ளை,
"இராசகிரி" கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
343, காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம், 24-4-68 எம் 19 3—5

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சிவமாநாட்டுத் தலைமையுரை

பதி, பசு, பாசம் என்னும் நித்தியப் பொருள்களுள்ளே நித்தியரும், பதிவிஞ்ஞான கலர், பிரளயாகலர், சகலர் என்னுஞ் சேதனர்களுள்ளே சேதனரும் ஆவார் சிவபெருமான்'' என்பதை கடோபநிடதம் ''நித்யோ நித்யாநாம் சேதந: சேதநாநாம்'' என்று கூறுகின்றது இப்பதி, பசு, பாசங்கள் தொழிற்பாடிலாத சொரூபமெனப்படும். தன்னிலையில் சிவம், ஆன்மா, மலம் என்று குறிக்கப்பெறும்.

சிவம்—பதி

சொரூப நிலையினதாகிய ''சிவம் விளங்கக் காணப்படுவதுங் காணப்படாததும் அல்லதாய், ஒரு குணமும் ஓர் அடையாளமும் இல்லாததாய், மலரகிதமாய், ஒன்றாய், அழியாததாய், எண்ணிறந்த ஆன்மாக்களுக்கும் அறிவாய்ச், சலிப்பற்றதாய்க், கண்டிக்கப்படாததாய் இன்பசொரூபமாய், மாறுபட்டவர்களுக்கு சென்று கூடுதற்கரியதாய், வழிபட்டவர்களுக்குச் சென்று பொருந்துகைக்கு இடமாகிய முத்திநெறியாய் அணுவுக்கு அணுவாய் மகத்துக்கு மகத்தாய்த் திகழ்வது'' என்று சிவப்பிரகாசம் கூறுகின்றது. இந்தச் சொரூப சிவத்தை ''அண்டங் கடந்த பொருள் அளவில்லாதோர் ஆனந்த வெள்ளப் பொருள்'' என்று திருப்பல்லாண்டு போற்றிப் புகழும். (வளரும்)

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோடு

முத்துக்குமாரு பொன்னம்பலம், சுன்னாகம்

இல- M B/8475 எதிராக —வழக்காளி

சரவணமுத்து சேதுகாவலர் கைம் பெண் செல்வநாயகி சுன்னாகம்

எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M B 8475-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்படும் ஆதனம் 1968-ம் ஆடி ஆனி மீ 16 ந் திகதி 16-6-68 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணியளவில் அக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை முதலும் வட்டியுமாக 2,950/— ரூபா இன்னும் 2000/- ரூபாவிக்கு 25-9-66 தொடக்கம் 16-9-67 வரைக்குள் நூற்றிற்குப் பத்து வீத வட்டியுங் கூட்டிக் கூட்டியதொகைக்கு 16-9-67 தொடக்கம் முழுப்பணம் இறுக்கும்வரைக்கும் ஐந்து வீத வட்டியும் கோட்டிற் செலவு 438-42 சதமும் ஏற்பட்ட செலவு 348/45 வெலியாத்துச் செலவு 46-37 இனிமேலேற்படும் செலவு 43/70) 26-10-67ல் கொடுத்த 1000/- கழித்து மிகுதி.

ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம்,வலிகாமம் வடக்குப் பகுதி, உடுவில் கோவிற்பற்று சுன்னாகம் இறை "தாவளைவிளாப்பு வயல்" வயற்பரப்பு 26 இதில் மேற்குப் புறமாக நிந்தமாக வயற் பரப்பு 13 இதற் கெல்லை கிழக்கு இக்காணியில் மிகுதி ஆதனம் வடக்கு முத்துக்கிருஷ்ணர் பெண் செல்லாச்சியினதனம் மேற்கு சின்னத்தம்பி சதாசிவத்திற்கும் துரையப்பா கைம்பெண் அன்னப்பிள்ளைக்குமுரியவாதனம் தெற்கு ஒழுங்கை இதடங்கலும் வடக்கெல்லைக் காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் பங்கும் வழி வாய்க்கால் பாவிப்புருத்தும். பதிவ. இல. H 344/262.

தா. க. பொன்னுத்துரை J. P.
'அகிலகம்" கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
28/1, யாழ்வீதி. யாழ்ப்பாணம். M 33 3-5

அடைவு நகை ஏல விற்பனவு

அரசாங்க உத்தரவுடன் அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கில் இருக்கும் த. பொன்னையா செல்லத்துரை அவர்கள் கடையில் 1-6-66 முதல் 31-12-66 வரைக்கும் அடைவு மீட்கப்படாத தவணை த பிய நகைகளை 1968-ம் ஆடி ஜூன் (ஆனி) மீ 1 உ (1-6-68) சனிக்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் மேற்படியார் கடையில் என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
Commissioner, Auctioneer & Valuer.
'இராசகிரி" ஏல விற்பனவாளர் & விலைமதிப்பாளர்.
343, காங்கேசன் துறைவீதி. யாழ்ப்பாணம். (எம். 18, 26, 3-5

யாழ்ப்பாணம்

ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 50/0 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிதி வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 24 மாசம் 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 7 விதமும் 8 விதமும் 9 விதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை

எங்கள் காரியாலய மூலமாக அறிந்துகொள்ளலாம்.

Std. 14. —மனேஜர்.

கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல: M. B 9109

சின்னையா செல்லையா
மாவிட்டபுரம்
—வழக்காளி

எதிராக

தம்பிமுத்து நல்லையா
தெல்லிப்பளை கிழக்கு
தெல்லிப்பளை —எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M B 9109-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1965-ம் ஆடி (18-5-68, மேமீ 18-ம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 1481/-ம் 26-5-67 தொடக்கம் 14-10-67 வரைக்கும் ரூபாய் 2000/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 314 சதம் 96

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு தெல்லிப்பளை கோயிற் பற்று மாவிட்டபுரம் இறை 'பட்டிக் கடவை' பரப்பு 7 1/2 யும் வான் பயிர் செய் பயிர்களும் இதில் சொரியலாய் 1/5 பங்கு இதற்கு எல்லை கிழக்கும் தெற்கும் மேற்கும் ஒழுங்கை வடக்கு காசிலிங்கம் பெண் பாக்கியத்திற்கும் மற்றபேருக்கும் உரிய ஆதனம்.

இ. செ. மாரிமுத்து,
Commissioner of Sales, Valuer
உத்தரவு பெற்ற ஏலத்தாரர்
விதானை வளவு, சித்தங்கேணி
1-4-68 (எம் 23 3-5-)

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

பிரதான வீதி (Main Street) 127-ம் இலக்க 1. J. D. A. புவிராஜசிங்கியும் 2. பெண் ஏன் ஜெனவும் வழக்காளி

வழ இல: MB 8756

எதிராக

யாழ்ப்பாணம் 3-ம் குறுக்குத் தெரு 1. அந்தோனிப்பிள்ளை செல்லத்துரையினையும் 2. பெண் மேரி அடைக்கலம் திரேசாவும் எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M. B. 8756-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணியை 1968-ம் ஆடி வைகாசி மீ 27-ம் திகதி கிழமை 27-5-68 முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 2780 ம் 16-1-67 தொடக்கம் 5-10-67 வரைக்கும் ரூபாய் 2000-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 318/48-ம்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று சுண்டிக்குளி இறை குளத்து வயலும் மறுபிரிவுக்ளும் யாழ்ப்பாணம் உத்தரவு பெற்ற வல்லிநாதர் A. சோதரன்னால் வரையப்பட்ட 2838-ம் இலக்கப் படத்தில் 4-ம் துண்டாகக் காட்டப்பட்டுள்ள பர. நெல் இலச்சம் ஒன்று (1) குளி பத்து (10) எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு 3-ம் துண்டு மேற்கு அன்னம் புவிராஜசிங்கியின் உரிமையாகி ஞானம் தெற்கு 5-ம் துண்டு கலைஅதிகாரமுடப்பட

அ. வேற்றிவேலு
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
துல. 18, 5-ம் குறுக்குத் தெரு
யாழ்ப்பாணம் M 27 3-5-68

கோட்டு விற்பனவு விளம்பரம்

1. செல்லப்பா முருகேசு வரியாலை யாழ்ப்பாணம் வழக்காளி

வழ. இல: MB 8692 D C. J. எதிராக

1. கணபதி தம்பிமுத்து நல்லூர் வாழ்ப்பாணம் எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M B 8692-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி. பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1968-ம் ஆண்டு வைகாசி மீ 18-ந் திகதி சனிக்கிழமை பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 4000-க் 22-12-66 தொடக்கம் 27-7-67 வரைக்கும் ரூபாய் 2000-க்கு 12% வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 433-74 சதம் ஏற்பட்ட செலவு 69-37 சத முடிவான செலவு 292-05 சதம் நிழ விருக்கும் செலவு ரூபாய் 72-32 சதம்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நல்லூர்ப் பகுதி நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை பிராமணவளவு நி ப. 4 [illegible] சின்னணு வாணபயிர் செய்யிர்களும் எல்லை கிழக்கு ஒழுங்கையும் இராசரத்தினம் பெண் நேசம்மாவின் உரிமைக்காரரிருந்தவை வடக்கு இராசரத்தினம் பெண் நேசம்மாவின் உரிமைக்காரரிருந்தனம் மேற்கு மூத்ததம்பி செல்லரெத்தினமும் அன்னம் கோவிலாதனமும் தெற்கு ஒழுங்கை இதில்லகளும் D 204/44.

இந்திரபவனம்
புங்குடுதீவு, 1—5—68.

மா. முருகேசு, J. P.
கொமிஷனர், விலைமதிப்பாளர்.

எம். 32. 3-5-68)

கோட்டு விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழ. இல. 8322

பொவல்லடி கந்தையா வடிவேலு —வழக்காளி.

எதிராக

காணவாய் தெற்கு கந்தர் (செல்லத்துரை —எதிராளி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்ப்பப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதனகீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1968-ம் ஆண்டு வைகாசி மாதம் 25 ந திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் குறித்த காணி யிடமாகவிருந்து எனனால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று காணவாய் இளவாலைக் குறிச்சியிலுள்ள தெருக்கட்டையொன்றை நிலப்பரப்பு 30ர் எல்லை கிழக்கு செல்லையா வடக்கும் செல்லாச்சிக்குடையவாதனம் வடக்கு கட்டையர் தாமுவுக்கும் மறுபேருக்கு முடையவாதனம் மேற்கு சின்னத்தம்பி தம்பிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய வாதனம் மேற்கு சின்னத்தம்பி தம்பிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய வாதனம் தெற்கு மெலவீரர் இராமலிங்கத்துக்கும் மறுபேருக்குமுடைய வாதனம் இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகள் வடலிகளடங்கலிற் சொரியலாய் 73/438 பங்கும்

தூரட்சித் தொகை	ரூபா 1855	00
இதில் ரூபா 1000-க்கு 27-9-65 தொடக்கம் 10-1-66 வரை 12 வீத வட்டி.	35	00
ரூபா 1890-கு 10-1-66 தொடக்கம் 4-10-67 வரை 5 வீத வட்டி	164	00
	2054	00
செலவு	211	87½
மொத்தம்	2265	87½
ரூபா 2054-க்கு 4-10-67 தொடக்கம் 18-3-68 வரை 5 வீத வட்டி	34	16
	2300	03½

வல்வெட்டித்துறை, 18-4-68
M 30. 3-5-68.

V M. KANDASAMY,
Commissioner of Sale & valuro

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

1. வேலுப்பிள்ளை இராசகோபால் சுண்டிக்குளி யாழ்ப்பாணம்
2. பெண் [illegible]ஸ்வரி வழக்காளிகள்

வழ. இல. M B 8078 எதிராக

1. வேலுப்பிள்ளை அப்புத்துரை கொட்டடி வண்ணார்பண்ணை மேற்கு யாழ்ப்பாணம்
2. பெண் [illegible]பதி எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M. B. 8078- இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1968 ம் ஆண்டு, ஆவி மாதம் 27-ம் திகதி (27-6-68) வியாழக்கிழமை பிற்பகல் 4-00 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் எனனால் விற்கப்படும்,

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 2750 இன்னும் ரூபா 2000 க்கு 22-3-66 தொடக்கம் 23-1-67 வரைக்கும் 100 க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 200. இதில் ரூபா 200 கொடுபட்டது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணார்பண்ணை கோயிற்பற்று வண்ணார்பண்ணை தெற்கு மேற்கிறை "சிறுவளவு" பர. நெல் இலா 16¾ எல்லை கிழக்கு சின்னப்பா தம்புவும் வாய்க்காலும் வடக்கு வாய்க்கால் மேற்கு டாக்குதர் துரையப்பாவின் உரிமைக்காரரின் ஆதனம் தெற்கு ஏரம்பக்குருக்கள் பஞ்சாங்கதீக்ஷிதர் குருக்களின் ஆதனம். இதைச் சேர்ந்தவைகளும் முற்பதிவு D 213/156

37 கொழும்புத்துறை வீதி
சுண்டிக்குளி யாழ்ப்பாணம்

தா. செல்லையா
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
M 26 3 5-68

பிஸ்கால் விற்பனை

பருத்தித்துறை மாவட்ட நீதி மன்றத்தில்

செல்லையா நாகலிங்கம் தொண்டைமானாறு —வழக்காளி
இலக்கம் 4285: விரோதமாக

1. பொன்னுச்சாமி ஜெயரட்ணராசா "சந்தோஷ" குருகாபுரி ஊப்புவெளி 12 குறிச்சி, திருக்காணமலை 2, குமாரசுவாமி கந்தசுவாமி, 3- பெண் செல்லச்சிறுமணி திருமும்பாராய் [illegible], சுவை[illegible] [illegible]ற, செறம்பன், மலேசியா 4. கதிரிப்பிள்ளை மருகசு, தற்காலம் 124, இராசா வீதி செறம்பான், மலேசியா, இறந்தது: 5. பெண் தங்கப்பொன்னு, இறந்தது: 6. வல்லிபுரம் சிவகுரு. 7. வல்லிபுரம் சிவப்பிரகாசம், ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை, கோல கங்சார் பேராக் மலேசியா. இறந்தது: 8. சடையர் வைரமுத்து இறந்தது 9. பெண் செல்லம்மா தொண்டைமானாறு, வைரமுத்து சுப்பிரமணியம், தொண்டைமானாறு, 8. ஆம் 9. ஆம் எதிரிகளின் பிரதிநிதி 10- அப்புத்துரை மகேந்திரன், தொண்டைமானாறு அத்துடன் இறந்த 6-ம் எதிரியின் பிரதிநிதியும் 11. அப்புத்துரை கனகேந்திரன் B. O. H. பகுதி B. O. H. எஸ்ரேட் றிங்லெற் C, கைலாண்ட்ஸ் பகாங், மலேசியா, 12. அப்புத்துரை மகள் விக்னேஸ்வரி, தொண்டைமானாறு. 13. ஆறுமுகம் கந்தசாமி தொண்டைமானாறு 14 பெண் நவரத்தினமாமன் அல்லது செல்லமணி அம்மான், தொண்டைமானாறு இறந்தது: 15. கந்தசாமி ஐயாமுத்து. 16. பெண் நேசமணி அம்மான், தொண்டைமானாறு, 17. மயிலவாகனம் இராசேந்திரம், தொண்டைமானாறு, 18. பெண் ஞானம்பாள், தொண்டைமானாறு, 19, கதிரிப்பிள்ளை துரைராசா தற்சமயம் மாவட்ட நீதி மன்றம் குருணாகலை, 20. பெண் இத்தினம்பாள் தொண்டைமானாறு, 21. சுப்பையா சிவானந்தன், தொண்டைமானாறு, பராயமற்றவர்கள் 22. முருகேசு தலைதுரை தொண்டைமானாறு.

23. முருகேசு தில்லைவிங்கர், ,,
24. முருகேசு மகள் தில்லைமணி, ,,
25. முருகேசு மகன் தில்லைகேஸ்வரி, ,,

இவர்களின்பரபரிப்புக்காரர் 4ம எதிரி.

26 இராசரத்தினம் திருஞானசம்பந்தர், 27. பெண் நிலகமணி, 12, 1/1 நந்தனார் தோட்டம், பயலப்பிட்டி 28. குருசு தில்லைராசா, தொண்டைமானாறு 29 முருகேசு தில்லைராஜமை, 124 இராசா வீதி, செறம்பான், மலேசியா, இறந்த 5 ம எதிரிகளாக 22-27 பதில் எதிரிகளாகப் பட்டன.

மேற்கு சொல்லிய வழக்கில் நீதிமன்றத்தால் அனுப்பப்பட்ட கட்டளைப்படி இதனகீழ் காணப்படும் ஆதனத்தை வழக்காளி. 1. 3. 6, 7 9, 10. 11, 12. 14, 16, 18, 20, 21, 22. 23 24, 25, 27, 28, 29, எதிரிகளுக்குடைய உரிமையையும் பிரயோசனத்தையும் 1968ம் ஆண்டு ஆவணி மாதம் 7 ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் பிரசித்த வெந்தீதில் விற்கப்படு மென்று இத்தால் அறிவிக்கப்படுகிறது.

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்தறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டி கோவிற்பற்று தொண்டைமானாறு இறை "மணற்கொல்லை" நில பர 1, குளி 2 19/32 உறுதிப்படி ஆனால் அளவைப்படி நி ப: 1 குளி 3 31/32 எல்லை கிழக்கு ஒழுக்கை வடக்கு துரைராசா பெண் இரத்தினம்பாளுக்கும்மற்றபேருக்குமுரிய ஆதனம். மேற்கு சிற்றாறு தெற்கு முத்தராமலிங்கம் பெண் செல்லமாகியதின் ஆதனம். இது உலர்ந்தா மேர்தர் சீவரத்தினம் அவர்களால் அளக்கப்பட்டு 2-9 52 திகதியைக் கொண்ட 1195 இலக்கப் படத்தின் 1ம், 2ம், துண்டுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது:- காணியின் பெறுமதி ரூபா 1960/-

குறிப்புகள்:- (1) ஆதனம் முதலில் பங்காளருக்குள் ரூபா 1960/— க் குறையாமல் விற்கப்படும், அவ்விதம் அவர்கள் வாங்காத பட்சத்தினால் திரும்ப ஏலத்தில் மற்றவர்களுக்கும் ஆகக் கூடிய கேள்விக்காரருக்கு விற்கப்படும்,

(2) கொள்விலைப் பணம் முழுவதும் பிஸ்கால் சலார் உட்பட காணி வாங்குபவர் உடனே கட்ட வேண்டும் கொள்விலை ரூபா 100—க்கு மேற்பட்டால் பங்காளரல்லாதார் கொள்விலையில் 1/4 பங்கும் பிஸ்கால் சலார் முழுவதும் உடனே கட்டி மிகுதிப் பணத்தை 30 நாட்களுக்குள் இறுக்கப் போதியதும் நல்லதமான 2 பிணைகாரருடன் ஒப்பந்தம் எழுதல் வேண்டும்,

(3) பிஸ்கால சலாரின் விபரமாவது:- பிரசித்த விளம்பரச் செலவு, கொள்விலைப் பணத்தில் கொமிஷன் 2 வீதமும், பயணச் செலவு முதலியன.

தா. ச. வேதநாயகம்
வடமாகாண பிஸ்கால்ஆகக்கார
யாழ்ப்பாணம், 25-4-68.

அடைவு நகை ஏலவிற்பனவு

அரசாங்க உத்தரவுடன் இல 24, முதலாம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணத்தில் அடைவு பிடிக்கும் கதிரப்பிரமணியம் அவர்களின் அடைவுகடையில் 1964 ம் ஆண்டு ஆவணி மீ 14-ம் திகதி தொடக்கம் 1966-ம் ஆண்டு மார்கழி மீ 31-ம் திகதிவரை அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் யாவும் என்னால் 1968-ம் ஆண்டு வைகாசி மீ 27-ம் திகதி திங்கள் கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் மேலே அடைவு கடையில் இருந்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வை ஏரம்பமூர்த்தி,
Auctioneer, ஏலவிற்பனையாளர்.

காரைநகர்,
28—4—68

எம். 25. 3 11—5-)

மலாயனுந் திருமாலுங் காணுமை மதிமயங்கப்
புலிமுனியும் பதஞ்சலியுங் கண்டுதொழப் புரிசடையார்
குலவுநடம் தருநதில்லைக் குடதிசைக கோபுரவாயில்
நிலவிய கற்பகக்கன்றி னிறைமலர்த்தா னிணைபோற்றி

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், பிரம்மஸ்ரீ க. செ. பாலசுப்பிரமணியஐயர் புன்னாலைக்கட்டுவன், சுன்னாகம் அவர்களால், 3—5—1968 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்.